*6*

# கொலோசெயரின் நிமித்தம் பவுலின் பிரயாசங்கள்

## (1:24-29)

*கிறிஸ்துவுக்காக பவுல் ஆற்றிய தனிப்பட்ட ஊழியம் எதிர்ப்புகள் மத்தியிலும் உபத்திரவத்தின் மத்தியிலும் செயலாற்ற வேண்டியிருந்தது. தேவனுடைய கடந்த கால இரகசியம் வெளியாக்கப்பட்டுள்ளது. என்பதே அவருடைய செய்தியாக இருந்தது. இப்பொழுது புறஜாதிகள் கிறிஸ்து தங்களுக்குள் இருப்பதால் பெற்றிருக்கிற மகிமையின் நம்பிக்கையையுடையவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு நபரும் நிறைவை அடையும்படி அவருக்குள் கொண்டுவருவதே பவுலின் பிரயாசமாயிருந்தது.*

## அவருடைய சந்தோஷம்: அவர்கள் நிமித்தம் அநுபவிக்கும் பாடுகள் (1:24)

***24*இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.**

***"இப்பொழுது நாம் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து" (1:24)***

*இப்பொழுது **நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து,** என்று பவுல் எழுதினார். இயேசுவின் சாட்சியாக பவுல் பாடுகளைப் பட வேண்டுமென்று அவர் காண்பித்திருந்தார் (நடபடிகள் 9:16). உபத்திரவப்படுவது மகிழ்ச்சியற்ற ஒரு காரியம். ஒரு தாயின் பேறுகால வலிமிகக் கடுமையாக இருக்கும், ஆனாலும் உலகத்திற்கு ஒரு குழந்தை வரப் போகிறது என்ற சந்தோஷத்தை அவள் பெற்றுக் கொள்வாள் (யோவான் 16:21). பவுல் பாடுகளை சந்தோஷமாய் அநுபவிக்க வில்லை, ஆனால் அந்தப்பாடுகள் கொலோசெயருக்குக் கொண்டுவரும் நன்மைகளைக் குறித்து சந்தோஷப்பட்டார். இதற்கு ஒத்த ஒரு சிந்தனையை பிலிப்பியரில் குறிப்பிட்டு, அவர்களுக்காக தான் பலியாக்கப்பட்டாலும், அதற்காக தான் சந்தோஷப்படுவதாகச் சொன்னார் (பிலிப்பியர் 2:17). உபத்திரவங்களில் சந்தோஷப்படுவதையே இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் நடப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார் (மத்தேயு 5:10-12; காண்க நடபடிகள் 5:41; 16:25; யாக்கோபு 1:2). இதுதான் சிலுவையிலே மரிப்பதைக் குறித்து இயேசுவின் எண்ணமாக இருந்தது (எபிரெயர் 12:2).*

*கொலோசெயர்களினிமித்தம் பவுல் என்ன வகையில் உபத்திரவப்பட்டார்? அவர் அதை விளக்கமாகச் சொல்லவில்லை. பவுல்படும் பாடுகளைக் குறித்த செய்தி ஒருவேளை அவர்களுக்கு எட்டியிருக்கக் கூடும். அவருடைய பாடுகள் தான் ஒருவேளை அவரை கிறிஸ்துவுக்குத் தலைவராக நியமித்திருக்கக் கூடும். அவரோடு சென்றவர்கள் அவரோடு கூட துன்புறுத்தப்பட வில்லை ஒருவேளை சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் அவரைப் போல தைரியமாக அவர்கள் சொல்லாமல் இருந்திருக்கலாம் (காண்க நடபடிகள் 14:19, 20). ஒரு அப்போஸ்தலனாக, தலைமைத்துவ நபராக சகோதரர்களுக்குள்ளே அவருடைய பாடுகள் அவர் கிறிஸ்துவுக்கு உண்மையான ஒரு பிரதி நிதியாக அங்கீகரிக்க ஏதுவாக்கியிருக்கக் கூடும், கூடவே அப்போஸ்தல அதிகாரமும் அவருக்கு இருந்தது. மேலும் கடுமையான எதிர்ப்புகளின் மத்தியில் அவர்கள் இயேசுவுக்கு உண்மையாய் நிலைத்திருக்க ஏதுவான முன்னுதாரணத்தையும் கண்டு அவரால் ஊக்கப்படுத்தப்பட்டிருக்கலாம்.*

*விசுவாசத்தில் ஒரு முன்னோடியாக பவுல் திகழ்ந்த காட்சியை அநேகக் கண்கள் கண்டன, அதை அவர் உணர்ந்திருக்க வேண்டும். தைரியத்துடன் அவர் சகித்துக் கொண்டிருந்ததால், சுவிசேஷத்திற்காக அவர் எப்படியெல்லாம் பாடு அநுபவிக்கிறார் என்று அறிந்து கொண்டவர்களுக்கு அவர் முன்மாதிரியைக் காண்பித்தார். உபத்திரவத்திலே அவர் உருக்குலைந்து போயிருப்பாரானால், அநேகர் ஊக்கமிழந்து விசுவாசத்தை விட்டுப் போயிருப்பார்கள். அவரது நல்ல முன்மாதிரி மற்றவர்களுக்கு ஒரு ஊக்கத்தையும் தைரியத்தையும் கொடுத்து மிகக் கடினமான சூழ்நிலைகளிலும் கூட கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டிருக்க போதிய பெலனைக் கொடுத்தது,* William Hendriksen *“அவருடைய சகிப்புத் தன்மை அநேகவிதமான கஷ்டச் சூழ்நிலையிலும் கூட கொலோசெயருக்கும், உண்மையில், தங்கள் விசுவாசத்தில் காணப்படுகிற எங்குமுள்ள சகல விசுவாசிகளுக்கும் பெலத்தைக் கொடுக்காதா?” என்று சொன்னார்.*[1]

*தொடர்ந்து பிடிக்கும் ஆபத்து நேரங்களிலும் கூட பவுல் உண்மையாயிருக்கவும் மற்றவர்களுக்கும் சொல்லி அதேபோல நடந்து கொள்ளச் செய்யவும் தீர்மானித்திருந்தார். அவர் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருந்தும் தனது உறுதியாய்த் தரித்திருந்த தன்மையால் பிலிப்பியர்கள் பயனடைந்ததை அவர் உணர்ந்திருந்தார். அவர் தமக்கு ஏற்பட்ட சூழ்நிலைகள் “சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்றும்” மேலும் “சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய் துணிந்திருக்கிறார்கள்” என்றும் எழுதினார் (பிலிப்பியர் 1:12, 14).*

***“கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக நிறைவேற்றுகிறேன்” (1:24)***

*“நிறைவேற்றுகிறேன்” எனும் வார்த்தை (antanaplēroō) புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணுகிறது.* ***குறைவாயிருக்கிறவைகளை நிறைவேற்றுதலில்,*** *பவுல் மட்டுமே உலகமனைத்திலும் இயேசுவின் சுவிசேஷத்தைப் பரவச் செய்து நிறைவேற்றுவதாகக் குறிப்பிடவில்லை. இந்த முயற்சியில் தனது பங்கை அவர் செய்வதாக பொருள் படச் சொல்லுகிறார்.*

*உபத்திரவங்கள் (thlipseis) என்பது "பாடுபடுதலிலிருந்து" (pathēmata), வித்தியாசமான பொருளையுடையது, வசனத்தின் துவக்கத்தில் இது காணப்படுகிறது. "பாடுபடுதல்" என்ற வார்த்தை வழக்கமாக பழிநூற்றிப்பேசும் சொற்களால் ஏற்படும் வலியையும் கிறிஸ்துவின் சிலுவையை சுட்டிக் காட்டக் கூடியதுமாயிருக்கிறது (2 கொரிந்தியர் 1:5; எபிரெயர் 2:9, 10). "வேதனை," எனும் வார்த்தையைக் குறித்து* H. C. G. Moule *எழுதியதாவது,*

> நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தருடைய அனுபவத்தைக் குறிக்கும் இந்த பதம் (புதிய ஏற்பாட்டில்) வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை, சிலுவைக் காட்சியைக் குறிக்கும் [சங்கீதம் *22* (LXX *21ல்*)] இது இடம் பெற்றுள்ளது. இது சாதாரணமான *மரணவலியைக்* குறிப்பதில்லை ஆனால் கஷ்டப்படுதலையும் உபத்திரவங்களையும், மற்றும் பொதுவாக *வாழ்க்கையின்* (பாரங்களாகிய) சோதனைகளையும் குறிக்கிறது.[2]

*அடுத்து வரும் வசனங்களில், பவுல் தனது ஊழியத்தைக் குறித்து விவாதித்து, "வேதனைகள்" என்று தான் குறிப்பிட்டதன் பொருள், என்னவென்று ஒரு உள்நோக்கு ஆய்வைக் கொடுத்தார். தனது ஊழியத்தின் விளைவாக, அவர் கஷ்டங்களையும் பாடுகளையும் சகித்தார் (2 கொரிந்தியர் 1:4-8; 2:4; 4:8, 17; 7:4, 5; பிலிப்பியர் 4:14; 1 தெசலோனிக்கேயர் 3:4, 7). 2 கொரிந்தியர் 11:23-30ல் இவைகளை விளக்கமாக சில விவரங்களைக் கொடுத்துப் பேசுகிறார். கிறிஸ்தவர்கள் சகித்துக் கொண்டுள்ள வேதனைகளைக் குறித்தும் அவர் எழுதினார் (2 கொரிந்தியர் 1:4; 8:2, 13; 2 தெசலானிக்கேயர் 1:4, 6, 7).*

*வேதனைகள் (பன்மையில்) என்று அவர் பேசினபோது, கிறிஸ்து சிலுவையில் அநுபவித்தவைகளைக் காட்டிலும் அதிகமானதாக பவுல் குறிப்பிட்டார். இயேசு சிலுவையில் பட்ட பாடுகளிலிருந்து பவுல் பட்ட பாடுகளெல்லாம் வித்தியாசமானதாயும் வித்தியாசப்பட்ட நோக்கத்திற்காகவுமிருந்தது. பவுல் குறிப்பிட்டதன் பொருள் பாரங்கள், கஷ்டங்கள், வெட்கம், மற்றும் பிரயாசங்கள் ஆகியவைகளை ஒரு மனுஷனாக வசைகளையும் எதிர்ப்புகளையும் தமது தனி ஊழிய காலத்தில் சந்திக்க இயேசு அவைகளைச் சகித்துக் கொண்டார் என்பதுதான் (எபிரெயர் 12:3, 4). அப்படிப்பட்ட சோதனைகளை சகிப்பதும் எதிர்ப்புகளைச் சந்திப்பதும் சுவிசேஷத்தை பிரஸ்தாபிக்கிறவர்கள் எதிர்பார்க்க வேண்டியவைகள்தான். இயேசுவுக்கு அவர்செய்த ஊழியத்தினால், பவுல், "கிறிஸ்துவின் பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 1:5). தன் "சரீரத்தில் கிறிஸ்துவின் மரணத்தை சுமந்து கொண்டு" திரிவதாக அவர் சொன்னார் (2 கொரிந்தியர் 4:10), "இயேசுவின் அச்சடையாளங்களையும்" சுமந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார் (கலாத்தியர் 6:17). அவருடைய குறிக்கோளெல்லாம் "அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை" அநுபவிப்பதுதான் (பிலிப்பியர் 3:10).*

*இயேசுவின் வேதனை மிகு அநுபவங்கள் வசனத்தை பிரஸ்தாபப்படுத்தினவர்களுக்குள்ளே பாடுகளுக்கு ஆரம்பம் மட்டுமே. அவர்பரமேறிப் போனபின், அவர் பட்ட பாடுகளெல்லாம் அவரைப் பின்பற்றினவர்களிடத்தில் தொடரும். அவர் தொடர்ந்து பூமியில் நிலைத்திருந்து சுவிசேஷத்தைப் பரப்பியிருந்திருப்பாரென்றால், அவர்*

இன்னும் அதிகமான பாடுகளையும் எதிர்ப்புக்களையும் சந்தித்திருக்கக் கூடும். மாறாக, அவரைப் பின்பற்றிப் போனவர்கள் அவரது ஊழியத்தினிமித்தம் வரும் பழிச் சொற்களைச் சகித்து அவர் துவங்கி வைத்தவைகளை நிறைவேற்ற வேண்டும். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுங்காலம் வரை, எதிர்ப்புகளும் தொடர்ந்து கொண்டு தானிருக்கும்.

> இப்படியாக பவுல், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினிமித்தம், இன்னும் குறைவாயிருக்கிறவைகளை நிறைவாக்குகிறார், இதை அவர் தமது வார்த்தையினால் மட்டுமல்லாது, தன்னுடைய மாம்சத்திலும், அதாவது, தன்னுடைய உண்மையான, சரீரத்திலும் செயல்படுத்துகிறார். இது "கிறிஸ்துவின் பாடுகளுக்கு" தன்னை அவர் உட்படுத்திக் கொள்வதையும், கிறிஸ்துவினிமித்தம் கஷ்டங்களை சந்திப்பதையும் குறிப்பிடுகிறது; இந்த கஷ்டங்கள் மட்டுமே பிரசங்கிக்கப்படும் செய்தியை வலிமைமிக்க தாக்குகிறது. அதின் மூலம் கொலோசெயர்களுக்குள்ளே இருக்கும் விசுவாசம் அதன் நிறைவை அடையும், மேலும் உலக முழுவதும் இருக்கும் மற்ற சமுதாயமும் நிறைவை அடையும்.[3]

"கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானவைகளை நிறைவேற்றுகிறேன்" என்று சொல்லுவதன் மூலம் பவுல் இயேசுவின் மரணம் ஒரு குறைவான பலியாக மட்டுமே இருந்தது ஆதலால் அதை நிறைவுசெய்ய மேற்கொண்டு பாடுகள் அவசியமாயிற்று என்ற பொருளில் எழுதவில்லை. அவர் விளக்கமாக இயேசு தமது மரணத்தினாலே (வசனங்கள் 20-22) ஒப்புரவாகுதலை சாத்தியமாக்கினார் என்று சொன்னார், அதினால் கிறிஸ்தவர்கள் அவருக்குள் நிறைவாயிருக்கிறார்கள் (2:10). இயேசுவின் ஒரே முறை பலி அவரைப் பூரணமாக, "நிறைவுபடுத்தியது" (எபிரெயர் 5:8, 9), போதுமானதாயுமிருந்தது. அவர் முழு உலகத்தின் பாவங்களையும் மூடிப்போட வல்லவராயிருக்கிறார் (1 யோவான் 2:2). ஒரே தரப் பலியினால் (எபிரெயர் 7:27; 9:26-28; 10:10-14), மனிதனுக்குத் தேவையான இரட்சிப்பை அவர் பூரணமாக்கினார்.

### *"கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (1:24)*

தன்னுடைய பாடுகளினால், பவுல் இப்படிச் சொல்லமுடிந்தது, ***கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.*** அவருடைய பாடுகள் கொலோசெயர்கள் நிமித்தமாக மட்டுமல்ல, ஆனால் முழு சரீரத்துக்குமாக சொல்லப்பட்டது. அவர் தம்மைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்திருந்தபடியாலும் அவருடைய சுயவிருப்பத்தின்படியல்லாது, கிறிஸ்துவின் சரீரத்திற்கென்று செய்தபடியாலும் அவர்மீது இக்கட்டான நிலைமைகளை மற்றவர்கள் ஏற்படுத்தினர்.

அவர் "என் மாம்சத்தில்" (*en tē sarki mou*), என்று சொன்னபோது, பவுல் தனது மாமிச சரீரத்தில் வாசம் பண்ணிக் கொண்டிருந்த உள்ளான நபரைக் குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 4:16; 5:1, 4) அவர் தனது சரீரம் பாவத்தன்மையுடன் இருப்பதாகக் கருதவில்லை, இதுதான் மறையியல்

*ஞானிகளின் பின்னதான போதனை.*

*தான் கிறிஸ்தவனாகும்பரை, பவுல் மற்றவர்களின் வேதனை கொடுக்கும் கைகளுக்கு விலகியிருந்தார். இயேசுவை பின்பற்றுபவரானபோது, எப்படியிருப்பினும், அவர் ஏறத்தாழத் தொடர்ச்சியாக உபத்திரவங்களைச் சந்தித்தார். அவருடைய பாடுகளெல்லாம் அவருடைய சுய பாவங்களினால் அல்ல. அவருடைய கஷ்டங்களெல்லாம் தேவனிடத்தில் முழு நம்பிக்கையை ஏற்படுத்திய வேளையில், அவை இயேசுவின் சரீரமாகிய சபைக்கும் பிரயோசனமாயிருந்ததை நிரூபித்தது, வேறொருவரும் செய்யமுடியாத அளவுக்கு அவர் சுவிசேஷத்தை பரப்பமுடிந்தது, அதினால் சபை ரோம சாம்ராஜ்யத்தின் பெரும்பாலான இடங்களில் வளர்ந்தது. அவருடைய அனைத்து முயற்சியினாலும் அவர் எவ்வளவுக் கெவ்வளவு கஷ்டங்களைப் பட்டாரோ அவ்வளவுக்கும் மாறாக, அவர் சென்ற இடங்களிலெல்லாம் சபைகள் எழும்பி பக்தி விருத்தியடைந்தன. கிறிஸ்துவின் சரீரத்தின் சார்பில் அவர் செய்த ஊழியம் உலக மெங்கிலும் இருந்த உள்ளூர் சபைகளை கட்டி எழுப்பவும் புதிய சபைகளை ஸ்தாபிதம் செய்யும் நோக்கமுடையதாயிருந்தது, இதோடு கூட, சபைகளுக்காக கவனம் செலுத்துவதில் அவர் மிக அதிகமான சகிப்புத்தன்மை கொண்டிருந்தார் (2 கொரிந்தியர் 11:28).*

*அவர் பெற்ற துன்புறுத்தல்கள் சில சமயத்தில் மிகவும் கடுமையாக இருந்ததுண்டு. தனது வாழ்க்கையே தனக்கு வெறுத்துப்போகிற அளவுக்கு அவர் பாடுகளைப் பட்டார் (2 கொரிந்தியர் 1:8, 9; 6:4, 5; 11:23-27). பலத்த எதிர்ப்புகள் மற்றும் கொடூரமாக நடத்தப்படுகையில் பவுல் வசனத்தை பிரசங்கித்தார், அப்பொழுது அவர் எவ்வளவு சரீர வேதனைகளை உணர்ந்திருப்பார் என்று கிறிஸ்தவர்கள் ஒரு போதும் அறிந்து கொள்ள இயலாது. அவர் எப்படிப்பட்ட பாடுகளை சகிக்கப் போகிறார் என்று பவுலை இயேசு எச்சரித்து ஆகிலும் பயப்பட வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்தார் (நடபடிகள் 9:16; 18;9, 10; 1 கொரிந்தியர் 2:1-3).*

*சுவிசேஷத்தைப் பரப்பும் பொருட்டு அவர் பட்ட பாடுகளினால், அவர் கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்குள்ளவராயிருந்தார். கிறிஸ்துவினிமித்தம் மற்றவர்கள் இன்னும் அதிகமான பாடுகளை அநுபவிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கலாம்; இயேசுவைப் பின்பற்றிப்போகிறவர்கள் முடிவு பரியந்தம் பாடுகளை எதிர்பார்க்கலாம். ஒரு வகையில், இயேசு பரமேறிப்போனபின், பவுல் இயேசு விட்டுச் சென்றவைகளை எடுத்துக் கொண்டார். சகிப்புத்தன்மைக்கு தன்னை ஒரு முன் மாதிரியாக வைத்த அவர் இயேசுவைப் பின் பற்றுவதிலும் முன் மாதிரியை வைத்தார் (1 பேதுரு 2:21).*

## *இரகசியம் வெளிப்படுத்தப்பட்டது (1:25-27)*

***25 ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து,***
***இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட***
***இரகசியமாகிய தேவ வசனத்தைப் பூரணமாகத் தெரியப்படுத்துகிறதற்கு,***
***26 உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட***
***உத்தியோகத்தின்படியே நான் அந்த சபைக்கு ஊழியக்காரனானேன்.***
***27 புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின்***

**ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்த சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.**

***"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து" (1:25)***

*இயேசுவின் வருகைக்குமுன் கிறிஸ்துவைக்குறித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்* **ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்தது.** *தேவன், தமது சுயசித்தத்தின்படியான காலத்தில், அவைகளின் பொருளை வெளிப்படுத்த தீர்மானிக்கும் வரை அது மறைபொருளாயிருந்தது. எபேசியர் 3:3-5ல் பவுல் இதன் மறைபொருளை விவரிக்கிறார். அங்கே, "ஆதிகாலங்களின்" இரகசியத்தை நாம் அவர் எழுதினவைகளைக் கொண்டு புரிந்து கொள்ள முடியும் என்று சொன்னார்.*

*பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை புரிந்து கொள்ள இன்னும் அதிகமான வெளிப்பாடு தேவை என்பதற்கு எத்தியோப்பிய மந்திரி ஒரு நல்ல உதாரணமாவான். ஏசாயா 53ல் கூறப்பட்டது என்ன என்பதை பிலிப்பு இயேசுவைக் குறித்து கூறும் வரை அவன் விளங்கிக் கொள்ள வில்லை (நடபடிகள் 8:30-39).*

*இயேசுவின் வருகையைக் குறித்துப் பேசும் தீர்க்கதரிசனங்களும் நிகழ்வுகளும் உலக வரலாற்றின் ஆரம்பத்திலேயே துவக்கம் பெற்றது. இயேசு வருவதற்கு சுமார் 1,500 வருடங்களுக்கு முன் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பின்னும், அவரைக் குறித்து அநேகக்காரியங்கள் குறிப்பிடப்பட்டன. இயேசு வந்து தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றையும் தமது ஜீவியத்தாலும் போதனைகளாலும் ஒன்றுபடுத்திய காட்சியாக முன்வைத்து உதவும் வரை அவைகளைப் புரிந்து கொள்வது ஏறத்தாழ சாத்தியமற்றவைகளாயிருந்தன (லூக்கா 24:44). உண்மையிலேயே, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் அவருடைய பங்கு அநேக கடந்த கால சந்ததிகளிலிருந்து மறைக்கப்பட்டிருந்தது.*

***"இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்" (1:25)***

*இரகசியம் (mustērion) என்றால் மூடிவைக்கப்பட்டு அது வெளிப்படுத்தப்படும் வரை புரிந்து கொள்ளமுடியாத ஒரு உண்மை என்று பொருள்.* J. B. Lightfoot *"... இந்த வார்த்தையின் எளிமையான பொருள் என்னவெனில் 'ஒரு காலத்தில் மறைவாயிருந்து இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது,' " என்றும் "விசேஷித்த வெளிப்பாடு இல்லாததால் அறியப்படாதிருந்த ஒரு உண்மை,"[4] என்றும் சொன்னார். அது முற்றிலும் இரகசியமானது, ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாதது என்று பொருள் அல்ல. பழைய ஏற்பாட்டின் சில தீர்க்கதரிசன வாக்கியங்கள் மறைக்கப்பட்ட இரகசியமாகவே வைக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடு இல்லாமல், ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாததாக இருந்திருக்கும் (2 கொரிந்தியர் 3:14).*

*இயேசு தமது சீஷர்களிடம் பரலோகராஜ்யத்தின் இரகசியங்களை*

அறியும்படி அவர்களுக்கு அருளப்பட்டது, கூடிவந்த கூட்டத்தாருக்கோ அருளப்படவில்லை என்று சொன்னார் (மத்தேயு 13:11). தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் மற்றும் இயேசு மூலமாக வரும் ஆசீர்வாதம் ஆகியவைகளைக் குறித்து பேசும் போது பவுல் இதே வார்த்தையைத்தான் பயன்படுத்தினார்.[5] இரகசியத்தின் முக்கிய பகுதி தேவன் புறஜாதிகளையும் யூதர்களையும் ஒரே சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக் கொள்வார் என்பதுதான் (எபேசியர் 3:3-6).

ஆதிகாலங்களில் இரகசியம் மறைவாக வைக்கப்பட்டிருந்தது, ஆனால் இப்போதோ அறியப்படுத்தப்பட்டிருந்தது. தேவன் தம்முடைய காலம் நிறைவேறினபோது (கலாத்தியர் 4:4) அந்தப்படி வெளிப்படுத்தினார். இப்பொழுது அது புரிந்து கொள்ளத்தக்க சத்தியமாயிற்று.

மூடி மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தின் நற்செய்தியின் முக்கியமான பகுதியாக இருந்தது இயேசுதாமே (1 தீமோத்தேயு 3:16; எபேசியர் 3:4-6). அவருடைய வருகையானது இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதுமல்லாமல், புறஜாதிகள் உட்பட சகல ஜனத்தாரையும் ஆசீர்வதிக்கும். அநேக கூற்றுகள் இந்த சத்தியத்தைக் குறித்து மறைமுகமாக அறிவிக்கின்றன.[6]

புதிய ஏற்பாட்டினூடே, இரகசியம் பரிசுத்தவான்களுக்கு அறியப்பண்ணப்பட்டது. சுவிசேஷம் வெளிப்படுத்திய இரகசியத்தை கொலோசெயர்கள் மட்டும் தான் புரிந்து கொள்ளக் கூடிய ஒரே மக்கள் என்று பொருளல்ல, ஏனெனில் இப்பொழுது அது முழு உலகத்துக்கும் பிரசங்கிக்கப்படுகிறது (மாற்கு 16:15), தேவனுடைய பரிசுத்தவான்கள் தான் இரகசியத்தைப் புரிந்து கொண்டவர்கள். அது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டமுறையிலே நேரடியாக வெளிப்படுத்தப்பட வில்லை. இரகசியம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அப்போஸ்தர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டது (எபேசியர் 3:3-5). அவர்கள், அதன் பிரதிபலிப்பாக, வெளிப்படுத்தப்பட்ட இந்த இரகசியத்தை பரிசுத்த ஆவியானவர் போதித்த வார்த்தைகளாலே அவர்களுக்குச் சொல்லி மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டார்கள் (1 கொரிந்தியர் 2:9-13).

1 கொரிந்தியர் 2:14, 15ஐக் குறிப்பிட்டு சிலர் இன்று பரிசுத்த ஆவியானவரின் உதவியின்றி தேவனுடைய வசனத்தைப் புரிந்துகொள்ள இயலாது என்கின்றனர். கிறிஸ்தவர்களல்லாதோர் தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்ள இயலாது என்று பவுல் கூறவில்லை. மாறாக, அவர் "ஜென்ம சுபாவமுள்ள மனுஷர்" ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்ளமாட்டார்கள், ஏனெனில் அவை அவர்களுக்கு பைத்தியமாகத் தோன்றும் என்று எழுதினார். ஆவிக்குரிய காரியங்களை அவன் சரியான மனதோடு அணுகிஅவைகளை புரிந்து கொள்ள மாட்டான் ஏனெனில் அவனைப் பொறுத்தவரை அவை பைத்தியமாகத் தோன்றும் (1 கொரிந்தியர் 1:18, 23).

இழந்து போனவர்களால் தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்ள இயலாமற்போனால், பிறகு அவர்கள் அவைகளை வாசிக்கவோ பிரசங்கிக்கப்படுவதை கேட்கவோ காரணமிராது. சுவிசேஷம் (எபேசியர் 1:13) இழந்து போனவர்களுக்கு பிரசங்கிக்கப்பட *வேண்டும்,* ஏனெனில்

*அதில்தான் அவர்களின் இரட்சிப்பிற்கேற்ற செய்தியின் மூலக்கூறு அடங்கியுள்ளது (நடபடிகள் 11:14; ரோமர் 1:16). ஆகிலும், இழந்து போன அனைவரும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஏனெனில் அவர்களில் அநேகர் ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வம் காட்டுவதில்லை (மத்தேயு 7:13, 14).*

### *"தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு உங்கள் பொருட்டு எனக்கு அளிக்கப்பட்ட(து)" (1:25இ, 26அ)*

*பவுல் தனது உத்தியோகத்தை தனக்கென துவக்கவில்லை. தேவனுடைய சித்தத்தின்படி அது இயேசுவால் அவருக்குக் கொடுக்கப்பட்டது.[7] அவருடைய உத்தியோகம் முன்பதாக யூதர்களை உட்படுத்தியது (ரோமர் 1:16; காண்க நடபடிகள் 13:14-16; 14:1; 17:1), பின்னர் புறஜாதிகள் சேர்க்கப்பட்டனர் (ரோமர் 11:13; கலாத்தியர் 2:8, 9). பவுலின் ஊழியம் தனிப்பட்ட ரீதியில் கொலோசெயருக்கு மட்டுமல்லாதிருந்தும் அவர்களும் உட்படுத்தப்பட்டனர்.*

*பவுலின் உத்தியோகத்தின் நோக்கம் இயேசுவின் முழுச் செய்தியை தான் சந்தித்த எவரிடத்திலும் ஒப்புவிப்பது தான். அவர் இதை நேர்மையாகச் செய்தார். எபேசுப் பட்டணத்து மூப்பர்களிடத்தில் அவர் "பிரயோஜனமான ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் ..." என்றும்; "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே" என்றும் சொன்னார் (நடபடிகள் 20:20, 26).*

***தேவ வசனம்*** *எனும் வார்த்தை கொலோசெயரில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட பிற சொற்றொடர்களுடன் "சத்திய வசனமாகிய. சுவிசேஷம்" (1:5), "கிறிஸ்துவின் வசனம்" (3:16), "திருவசனம்" (4:3) ஆகியவை சேர்க்கப்பட்டன. பிதாவிடத்திலிருந்து தாம் பெற்ற வார்த்தையை இயேசு வெளிப்படுத்தினார் (யோவான் 12:49, 50; 17:8) அது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு பரிசுத்த ஆவியின் மூலமாகக் கொடுக்கப்பட்டது (யோவான் 14:26; 16:13-15; எபேசியர் 3:3-5).*

*தேவனுடைய வசனத்தை அறிவிப்பதுதான் பவுலின் மிக முக்கியத்துவம் வாய்ந்த செயலாக இருந்தது, அப்படித்தான் தீமோத்தேயுவினிடத்தில் அறிவுறுத்தினார் (2 தீமோத்தேயு 4:2). "தேவ வசனத்தை" அவர் பிரசங்கித்தார், போதித்தார்.[8]*

### *"தேவனால் அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே" (1:26ஆ)*

*பிதாவும் குமாரனும் ஒருவருக்கொருவர் இணைந்து செயல் புரிகின்றனர். இயேசு* ***(உக்கிராணத்துவம்)*** *உத்தியோகம் (*oikonomia*), மற்றவர்களுக்குச் செய்யும் பணியில் காணுகிற பொறுப்புணர்வுள்ள ஸ்தானம், அநீதி நிறைந்த உக்கிராணக்காரன் தனது உக்கிராண உத்தியோகத்தை இழக்கிறதைப் பற்றிய உவமை ஆகியவைகளில் பயன்படுத்துகிறார் (லூக்கா 16:1-4, 8). அடிப்படையில் oikonomia என்பது, "உக்கிராணக்காரன்" அல்லது "உக்கிராணுத்துவம்" (உத்தியோகம்) என்று மொழிபெயர்க்கப்பட்டது (லூக்கா 12:42; 1 கொரிந்தியர் 9:17; எபேசியர் 3:2; தீத்து 1:7; 1 பேதுரு 4:10);*

*"பொருளாளர்" என்பதும் (உக்கிராணக்காரன்) குறிப்பிடப்படுகிறது (ரோமர் 16:23); மேலும் அவன் "விசாரணைக்காரன்" (கலாத்தியர் 4:2) என்றெல்லாம் கூறப்படுகிறது (எபேசியர் 1:10; 1 தீமோத்தேயு 1:4).*

*சுவிசேஷத்தைப் பரப்பும் கடமையை இயேசு பவுலிடம் ஒப்புக்கொடுத்திருந்தார். இந்தப் பொறுப்பை நிறைவேற்ற, பவுல் தன்னுடைய ஜீவன், நேரம், ஆஸ்திகள் மற்றும் திறமைகள் அனைத்தும் இயேசுவுக்கே சொந்தம் என்றும் அவருடைய ஊழியத்திற்கென பயன்படுத்த வேண்டும் என்றும் விரும்பினார். அவர்தம்மை இயேசுவுக்குச் சொந்தமானவைகளின் உக்கிராணக்காரனாகக் கண்டான். இக்காரணத்தினால், தமது பராமரிப்பில் விடப்பட்டுள்ள அனைத்தையும் உண்மையாக பயன்படுத்தக் கடமைப்பட்டிருப்பதாகவும் உணர்ந்தார் (1 கொரிந்தியர் 4:1, 2). அவர் மனிதனையல்ல தேவனையே பிரியப்படுத்த முயற்சித்தார் (கலாத்தியர் 1:10-12), அவர் இயேசுவுக்கே கணக்குக் கொடுக்கவேண்டும் என்று உணர்ந்தார் (2 கொரிந்தியர் 5:10).*

### *"நான் அந்த சபைக்கு ஊழியக்காரனானேன்" (1:26)*

*பவுல் தனக்குத்தானே **சபைக்கு ஊழியக்காரனாக்கப்பட்டதைச்** சுட்டிக் காட்டினார் (diakonos, "பிரதிநிதி, இடையில் நின்று பேசுபவர், ஒழுங்கு செய்பவர்"),[9] கிரேக்க வசனப்பகுதியில் வசனம் 25ல் காணப்படுகிற "சபை" எனும் வார்த்தை கூறப்பட வில்லை ஆனால் அப்படி அர்த்தப்படுகிறது. இந்த வகையில் தன்னை உதவிக்காரனுடைய தகுதியில் வைத்துப் பேசவில்லை; மாறாக, தான் கிறிஸ்துக்கு ஊழியக்காரனென்றும் இயேசுவே இந்தப் பொறுப்பைக் கொடுத்தார் என்றும் குறிப்பிட்டார். சபைக்கு ஊழியக்காரனானது மட்டுமல்ல, சுவிசேஷத்துக்கும் அவர் தன்னை "ஊழியக்காரன்" அல்லது "பணிவிடைக்காரன்" (வசனம் 23) என்றார்.*

*தமஸ்குவுக்குப் போகிற வழியில் இயேசு பவுலுக்கு தரிசனம் கொடுத்த போது, பவுலிடம் அவர் ஊழியக்காரனாக நியமிக்கப்பட்டார் என்று சொன்னார் (hupēretēs; நடபடிகள் 26:16). இதே வார்த்தைதான் 1 கொரிந்தியர் 4:1ல் பவுல் இயேசுவுக்கு செய்த ஊழியத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அதே போல யோவான் மாற்கிற்கும் (நடபடிகள் 13:5); பணிவிடைக்காரருக்கும் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டது (லூக்கா 4:20); மேலும் இவர்கள் ஊழியக்காரர் எனப்பட்டனர் (மத்தேயு 5:25; 26:58; யோவான் 7:32; 18:3).*

*இந்த வசனப் பகுதியில் பவுல் கிறிஸ்துவுக்கு மாத்திரமல்ல சபைக்கும் தான் ஊழியம் செய்வதாக விவரித்தார். ஆயினும், சபையின் தேவைகளினிமித்தம் ஆற்றும் ஊழியப் பணியில், அவர் இயேசுவுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தார். தங்களின் சகக் கிறிஸ்தவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு சரியாக ஊழியம் செய்கிறவர்கள் அல்ல. இயேசு சொன்னார், "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 25:40).*

***“புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்த சித்தமானார்” (கொலோசெயர் 1:27)***

*__மகிமையின் ஐசுவரியம்__ என்பது பவுலால் எண்ணற்ற தடவை சொல்லப்பட்ட ஒரு கருத்து (காண்க ரோமர் 9:23; பிலிப்பியர் 4:19). “ஐசுவரியம்” எனும் பதத்தை கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதமாக அவர் பயன்படுத்துகிறார் (ரோமர் 2:4; எபேசியர் 1:7).*

*புறஜாதிகள் (ethnē, என்பதிலிருந்து ஆங்கிலத்தில் “எத்னிக்”* “ethnic” *என்பது வருகிறது). இதன் பொருள் “ஜனங்கள்” அல்லது “தேசங்கள்” என்பது. இஸ்ரவேலர்கள் தேவனுக்கு உண்மையுள்ள ஒரே ஜனம் என்பது போல தங்களைத் தாங்களே பாவித்துக் கொண்டார்கள். பூமியிலுள்ள மற்றவர்கள் “தேசங்களாக” உருவானவர்கள் - அதாவது, புறஜாதிகள், தேவனுடைய ஜனங்களல்லாதவர்கள் (காண்க லேவியராகமம் 26:45; எசேக்கியேல் 5:7), எனப்பட்டனர். இஸ்ரவேலர்கள் புரிந்து கொள்ளாத இரகசியம் என்னவெனில், தேவனுடைய திட்டத்தின்படி, ஒரு நாளிலே புறஜாதிகளும் தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பது தான். இஸ்ரவேலரின் கண்கள் குருடாக்கப்படாதிருந்தால் இந்த ஒரு முடிவை வசனங்களை வாசிப்பதிலிருந்து அறிந்து கொண்டிருந்திருப்பார்கள் (காண்க 2 கொரிந்தியர் 3:14). தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்து சகல ஜாதிகளும், அவருடைய சந்ததியார் மாத்திரம் அல்ல, அவருடைய சந்ததி மூலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று சொன்னார் (ஆதியாகமம் 12:3; 22:18). இஸ்ரவேல் தேசத்தின் மூலமாக ஜனங்களுக்குள் தேவன் துதிக்கப்படுவார் (சங்கீதம் 18:49; 117:1).*

***“கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்” (1:27)***

*அடுத்ததாக பவுல் விவாதிக்க கொண்டிருக்கிற இந்த இரகசியத்தின் மகிமையுள்ள ஐசுவரியத்தைக் குறித்து அடையாளப்படுத்தும் சொற்றொடர்:* **கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக, உங்களுக்குள்ளாக இருக்கிறார்.** *கிறிஸ்து தங்களுக்குள் இருக்கிறார் என்பதைப் பொறுத்தே கொலோசெயர்களின் மகிமையின் நம்பிக்கை சார்ந்திருந்தது. கிறில்து உள்ளே வாசம் பண்ணுகிற கருத்து புதிய ஏற்பாட்டில் வேறு சில இடங்களில் காணப்படுகிறது (யோவான் 17:23; ரோமர் 8:10; 2 கொரிந்தியர் 13:5; கலாத்தியர் 2:20; 4:19). அவருடைய வசனத்தை அன்புகூர்ந்து கீழ்ப்படிகிறவர்களோடே அவரும் பிதாவும் வாசம் பண்ணுவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (யோவான் 14:23). கிறிஸ்து கிறிஸ்தவர்களின் இருதயங்களில் விசுவாசத்தின்மூலம் வாசம் பண்ணுகிறார் (எபேசியர் 3:17). பரிசுத்த ஆவிதான் கிறிஸ்துகிரியை செய்கிற பிரதிநிதியாக இருக்கிற கிறிஸ்துவின் ஆவி (1 பேதுரு 1:11) மேலும் அவர் மூலமாக கிறிஸ்தவர்களுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:9, 11; 1 கொரிந்தியர் 3:16; 6:19; எபேசியர் 2:22; 2 தீமோத்தேயு 1:14). பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள சுதந்தரத்தின் அச்சாரமாக ஆவியானவர் கொடுக்கப்பட்டுள்ளார் (2 கொரிந்தியர் 1:21, 22; எபேசியர் 1:13, 14).*

*கிறிஸ்து “உங்களுக்குள்” “உள்” என்பது பன்மையாக இருக்கிறது. இயேசு*

*தமது ஜனங்களுக்குள் ஒரு குழுவாகவும் அவர்களில் தனிப்பட்ட ரீதியிலும் வாசம் பண்ணுகிறார். "மகிமை" யால், என்பதை கொலோசெயரின் முடிவாக பிரதிபலானாக பவுல் பொருள்படுத்தி பேசுகிறார். கிறிஸ்தவர்கள் பரலோகத்தில் ஜீவிக்கும்படி எதிர் நோக்கியிருக்கக் கூடும் (2 கொரிந்தியர் 5:1; 1 பேதுரு 1:3, 4).*

## அவர்களுடைய இலக்கு: கிறிஸ்துவுக்குள் நிறைவு *(1:28, 29)*

***28எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். 29அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.***

***"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும் படிக்கு" (1:28)***

*பவுலின் அறிவிப்புக்கும் அறிவுறுத்தலுக்கும் காரணம் கொடுக்கப்பட்டுள்ளது. மீண்டும், பவுல் தன்னிலை பன்மையில் (நாங்கள்) என்றும் மறுபடியும் தன்னிலே ஒருமைக்கே திரும்பி அடுத்த வசனத்தில் ("நான்" என்று) பேசுகிறார். நிறைவும் தேர்ச்சியும் அடைந்த கிறிஸ்தவர்களாக விருத்திசெய்ய பவுலின் இரட்டிப்பு அணுகுமுறையான அறிவுறுத்தலும் போதனையும் தேவையாயிற்று. பிரசங்கியார்களின் ஊழியத்தின் நோக்கம் ஜனங்களை கிறிஸ்துவுக்குள் நடத்துவதும் (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27) அவருக்குள் முழுமையாய் விருத்தியடையச்செய்வதும் தான். ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவது என்பது ஒரு பிரசங்கியார் அல்லது போதகரின் பணியின் துவக்கமே. முன்னேற்றமடையும் அபிவிருத்தியுடன் தேறினவனாக மாற வேண்டும் என்பதே இயேசுவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரின் குறிக்கோளாக இருக்க வேண்டும் (எபேசியர் 4:11-13; எபிரெயர் 6:1).*

*பவுல் எப்பொழுது யாருக்கு* ***ஒவ்வொரு மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்துவார்*** *என்று அவர் குறிப்பிடவில்லை. ஒருவேளை நியாயத்தீர்ப்புநாளில் இயேசுவுக்கு முன் எல்லாரும் தோன்றும் நேரத்துக்காக அவர் காத்துக கொண்டிருந்தார். அவருடைய விருப்பமெல்லாம் இந்த சகோதரர்களெல்லாரும் அனைத்து தனிப் பண்புகளையும் தங்களில் விருத்தி செய்து கொள்ள வேண்டும்மென்பதே, அதினால் இயேசுவின் வருகை நேரத்தில் அவர்களைக் குறித்து அவர் சந்தோஷப்படுவார் (1 தெசலோனிக்கேயர் 2:19, 20). அவர் தமது ஊழியத்தைச் செய்து அதன் பலனைப் பெற தீர்மானித்திருந்தார். சிலர் இழந்துபோக தெரிந்து கொண்டாலும் கூட (1 கொரிந்தியர் 3:12-15) ஒருவர் கூட பரிபூரணமாய் அனைத்து கிறிஸ்தவ குணாதிசயங்களை தங்களில் விருத்தி செய்யாமல் போனாலும் கூட அப்படியோரு தீர்மானம் அவருக்கு இருந்தது.*

*"தேறினவர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை teleios என்பதிலிருந்து*

மொழிபெயர்க்கப்பட்டது, இவ்வார்த்தை வசனம் 28ல் சொல்லப்படும் விதம் "பூரணமாக்கப்பட்டவர்கள்" என்பதைவிட சிறப்பான வார்த்தை (*teleioi,* என்பது அதே அடிப்படை வார்த்தையிலிருந்து வருகிறது) 4:12ல் காணப்படுகிறது. மத்தேயு 19:21ல் "பூரண சற்குணன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ஆகிலும் வேறு இடங்களில் "தேர்ச்சியடைதல்" என்று சொல்லப்படுகிறது.[10] பிற வசனப்பகுதிகளில் "பூரணப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது; ஆனாலும் "தேர்ச்சி" என்றாலும் அல்லது "முழுமை" என்றாலும் அது சிறப்பான மொழிபெயர்ப்பு. "பூரணம்" எனும் வார்த்தை தவறான கருத்துக்கு கொண்டு செல்லுகிறது. மனிதர்கள் பூரணசற்குணர்களாய் தேவனுடைய குணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது (மத்தேயு 5:48). பவுல் நிறைவை குறைவோடு வேறுபடுத்திக் காட்டுகிறார் (1 கொரிந்தியர் 13:10). எந்த கிறிஸ்தவனும் தேறினவனாக இருப்பதாக பவுல் நம்பவில்லை (பிலிப்பியர் 3:15), அல்லது யாரும் தேறினவர்களாவார்கள் என்றும் நம்பவில்லை (கொலோசெயர் 4:12). கிறிஸ்தவர்கள் பூரணராய் இருப்பதாக யாக்கோபும் எதிர்பார்க்கவில்லை (யாக்கோபு 1:4; 3:2). நிச்சயமாக, யோவானால் மனித வர்க்கம் தேறின அன்புள்ளவர்களாயிருக்க முடியும் என்று நம்ப முடியவில்லை (1 யோவான் 4:18).

ஆவிக்குரிய தேர்ச்சிக்கும் பூரண வளர்ச்சிக்கும் கிறிஸ்து உள்ளே வாசம் பண்ணுவதே அடிப்படையாயிருக்கிறது (வசனம் 27), அது மகிமையின் நம்பிக்கை ஆவிக்குரிய முதிர்ச்சியுடையவர்களாய் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு தேவபக்தியாய் வாழ்வதிலிருந்து கிடைக்கும் உள்ளான வளர்ச்சி தேவை. முற்றிலும் விருத்தியடைந்துள்ள ஒரு கிறிஸ்தவன் இயேசுவின் ஏதோ ஒரு போதனையில் சிறந்து காணப்படுகிறவனைக் காட்டிலும் மேலானவன். அவன் எல்லா ஒழுக்கங்களிலும் முழுமையாய் விருத்தி பண்ணிக்கொள்ளாவிட்டாலும், அவன் ஆவிக்குரிய, ஒழுக்கமான, உபதேசக் கோட்பாடுகளிலும், சமுதாயரீதியில் கிறிஸ்தவ ஜீவியத்தின் அனைத்து குணாதிசயங்களிலும் ஊழியத்திலும் வளர்ந்தால் மட்டுமே அது ஒரு முழு வளர்ச்சியாக இருக்க முடியும்.

### "அவரையே நாங்கள் அறிவித்து" (1:28)

பவுல் தன்னைக்குறித்தும் தீமோத்தேயுவைக் குறித்தும் பேசுகிறாரோ அல்லது ஒரு இதழாசியருக்குரிய மரபுப்படியாக **நாங்கள்** என்று குறிப்பிட்டாரோ? இதற்கு ஒரு சரியான பதில் கொடுப்பது சாத்தியமில்லை. அவர் அதை எழுதி வெளிப்படுத்தும் விதம் "இப்படிப்பட்ட சிந்தனையை நாம் ஆட்சேபிக்கிறோம்," என்று எழுதிய எழுத்தாளரின் கருத்துக்கு ஒத்திருக்கிறது, அவர் தனிப்பட்டவராயிருக்கையில் இப்படி எழுதினார். பவுல் அநேகமாக தன்னை*யும்* மற்றயாவரை*யும்* குறிப்பிட்டு எழுதிய ஒரு அவிசுவாசமுள்ள உலகத்துக்கு இயேசுவை முன் நிறுத்தியிருக்கக் கூடும். மற்றொருபுறம், அடுத்த வசனத்தில் அவர் குறிப்பிடும் "நான்" என்பது அவர் தன்னை மட்டுமே குறிப்பிட்டு "நாங்கள்" என்று சொல்லியிருக்கக்கூடும்.

பவுலின் பிரசங்கத்தின் இருதயம் இயேசுவே (1 கொரிந்தியர் 2:1, 2) மற்றவர்களுடைய பிரசங்கத்துக்கும் மையம் (இருதயம்) அவரே (நடபடிகள் 8:5, 35). அடிப்படைச் செய்தியாகிய - கிறிஸ்துவின் சிலுவை உலகத்துக்கு

*பைத்தியமாய்க் காணப்பட்டாலும் (1 கொரிந்தியர் 1:18), அது தேவ "ஞானத்தை" வெளிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது (sophia; 1 கொரிந்தியர் 1:24; மேலும் காண்க கொலோசெயர் 1:9).*

*1 தெசலோனிக்கேயர் 2:3-12ல் பவுல் மற்றவர்களுக்குப் போதித்து புத்தி சொல்வதில் தன்னுடைய தனிப்பட்ட அணுகுமுறையை வெளிப்படுத்தினார். அவர் தைரியத்தோடும் வஞ்சகத்தோடும் இல்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார், மனுஷனைப் பிரியப்படுத்தும் செய்தியாகவோ துராசையினால் நிறைந்ததாகவோ, இருக்க வில்லை, மனுஷரால் வரும் மகிமையைத் தேடவுமில்லை (வசனங்கள் 3-6). தேவனைப் பிரியப்படுத்த முற்பட்ட வேளையில், ஒரு குழந்தையை போஷிக்கும் தாயைப் போலவும் ஊக்கமளிப்பதில் தகப்பனைப் போலவும் சகோதரர்களிடம் அக்கரைகாட்டினார், ஏனெனில் அவர்கள் இவருக்கு மிகவும் அன்பானவர்களாயிருந்தனர் (வசனங்கள் 7-11). சில சமயங்களில் அவருடைய யதார்த்தமான அக்கரை அவரது உபதேசத்தின் போது அவரை அழக்கூட வைத்தது (நடபடிகள் 20:19, 31; 2 கொரிந்தியர் 2:4; பிலிப்பியர் 3:18).*

### "எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்" (1:28)

***எந்த மனுஷனுக்கும்** என்று அவர் எழுதுவதன் மூலம், சுவிசேஷம் உலகளாவிய ஒன்றாக பவுல் உறுதிப்படுத்துகிறார். எல்லாரும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அது யாருக்கும் விதிவிலக்காயிராமல், எல்லாருக்கும் உரியது (ரோமர் 10:16; 2 தெசலோனிக்கேயர் 1:8). "மனுஷன்" எனும் வார்த்தையின் (anthropos, முழு "மனிதவர்க்கம்") பொருள் ஆண் பெண் இருபாலரையும் குறிக்கும். பவுல் ஆண்களை மட்டும் பொருள்படுத்திக் குறிப்பிட்டிருந்தால் aner, எனும் வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பார், இதன் பொருள் "ஆண்," 1 கொரிந்தியர் 11:7-9ல் அதை வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். அவர் ஒவ்வொருவருக்கும், ஆண் பெண் யாராயிருந்தாலும், எல்லா ஞானத்தோடும் புத்தி சொன்னார்.*

*ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவுக்கென்று விருத்தியடைய வேண்டிய அவசியத்தை பவுல் உணர்ந்து கொண்டார். விசுவாசிகளின் தேவைகளை மாத்திரம் அவர் சந்திக்காமல் அவிசுவாசிகளுக்கும் அதையே செய்தார். இரண்டுக்கும் கடமைப் பட்டவராக அவர்: "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" (ரோமர் 1:14), என்றார்.*

***புத்தி சொல்லுவதில்** ஜனங்களை எச்சரிப்பதிலும் ஒழுங்கீனத்தின் விளைவுகளையும், ஆவிக்குரிய தன்மையற்ற நிலையையும், தவறான **உபதேசங்களை** பின்பற்றுவதையும் உட்படுத்திப் போதித்தார். அது நேர்மறை மற்றும் எதிர்மறை காரியங்களையும் உட்படுத்தியது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் எது சரியோ அவைகளைச் செய்யவும் தவறானவைகளை தங்கள் வாழ்க்கையில் தவிர்க்கவும் வேண்டியுள்ளது. வலியுறுத்தல் நீதியுள்ள வாழ்க்கை வாழ்வதைக் குறித்ததாக இருக்கையில், தீமையானவைகளைத் தவிர்க்க வேண்டிய முக்கியத்துவம் மேலோட்டமாய் விடுபட்டுவிடக் கூடாது.*

*இயேசு "வேண்டாம்" எனக் கூறுவதில் எவ்வித சிறு தடுமாற்றமும்*

அடைய வில்லை. மலைப்பிரசங்கத்தில், அவருடைய போதனைகளை கேட்டவர்களிடம் என்ன செய்ய வேண்டும் என்று போதித்ததுடன், அவர்கள் என்ன செய்யக் கூடாது என்றும் போதித்தார் (மத்தேயு 5:34; 6:2, 3, 5, 16, 19, 25, 31, 34; 7:1, 6). கிறிஸ்தவம் பெரும்பாலும் நேர்மறை விஷயங்களையுடையதுதான், ஆனால் ஞானமற்ற தீமையான காரியங்களுக்கு எதிராக எச்சரிப்பையும் அது கொண்டுள்ளது.

இயேசுவின் போதனைகள் தேவ **ஞானத்தை** அடிப்படையாகக் கொண்டது. பவுல் தேவனுடைய ஞானத்தை முன் வைத்தார் (1 கொரிந்தியர் 1:24, 30; 2:7) உலக ஞானத்திற்கு பதிலாக தேவ ஞானத்தையே முன் வைத்தார் (1 கொரிந்தியர் 2:13). அவர் நய வசனிப்புடனோ மனித ஞானம் போதிக்கிற பிரகாரமோ அவர்களை சம்மதிக்க வைக்கவில்லை; எளிமையாக தேவனுடைய செய்தியை மாத்திரம் முன் வைத்தார் (1 கொரிந்தியர் 2:1-5).

**“அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி, போராடிப் பிரயாசப்படுகிறேன்” (1:29)**

பவுலின் பிரயாசங்களுக்கு ஒரு **நோக்கம்** இருந்தது. ஜனங்களை மனமாற்றம் செய்வதில் தம்மை ஒப்புக் கொடுத்திருந்தார், மேலும் கிறிஸ்துவைப் போல அவர்களைக் கொண்டு வருவதன் மூலம் இனியும் அவர்கள் வளர்ச்சியற்ற கிறிஸ்தவர்களாயிராதபடி செய்தார் (எபேசியர் 4:13-15).

**பிரயாசம்** என்று பவுல் குறிப்பிட்டதன் மூலம், இயேசுவுக்கு செய்யும் ஊழியத்தில் உட்படுத்தப்பட்டுள்ள கடினமான உழைப்பை பொருள்படுத்துகிறது. **போராடி** (*agōnizomenos*) என்பது ரண வேதனை தருகிற, வலி மிகுந்த முயற்சியை உட்படுத்தி பேசுகிறது. அது பவுலால் உபயோகப்படுத்தப்பட்டுள்ளபடி நேரடி போராட்டத்தைக் குறிப்பது போன்றுள்ளது (யோவான் 18:36) அத்துடன், ஒரு உருவகமாக, உடற்பயிற்சியின் பந்தயத்தில் போட்டியிட ஏதுவான கடும்பயிற்சியை (1 கொரிந்தியர் 9:25) கிறிஸ்தவ ஜீவியத்துடன் ஒப்பிட்டுப் பேசுகிறார் (1 தீமோத்தேயு 6:12; 2 தீமோத்தேயு 4:7).

இன்னும் நேரடி மொழிபெயர்ப்பில், “... எனக்கு அவர் கொடுத்துள்ள அவரது சக்தியின்படியே எனக்குள் இருக்கிற வல்லமையுடன் போராடுகிறேன்” என்று வாசிக்கக் கூடும். **வல்லமை** எனும் பெயர்ச்சொல் (*energeia*, “சக்தி”) மற்றும் **கிரியைகள்** (*energoumenēn*, “சக்தியூட்டல்”) வார்த்தை ஜாலங்களாக அறிந்தே சொல்லப்பட்டதாக இருக்கலாம். இரண்டு பயன்பாடுகளும் சேர்ந்து சக்தியின் மூலக்கூறையும் பவுலுக்குள் கிரியை செய்யும் வல்லமையையும் வலியுறுத்துகின்றன. பவுலுக்குள் கிரியை செய்யும் வல்லமை இயேசுவிடமிருந்து வந்தது, அவர், பரிசுத்த ஆவியானவர் மூலமாக, ஆவிக்குரிய ரீதியில் அனைத்துக் கிறிஸ்தவர்களையும் பெலப்படுத்துகிறார் (எபேசியர் 3:16).

**பலத்தின்படி** என்பதற்கான கிரேக்க வார்த்தை *dunamis*. மனித பிரதிநிதித்துவமில்லாமல், மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே, பவுல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார். அவர் அற்புதம் செய்யும் பெலனை இது கொடுத்தது (2 கொரிந்தியர் 12:12).

நடபடிகள் 1:8ல் இயேசு மற்ற அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின அதே வல்லமையை பவுலும் பெற்றார். இந்த "வல்லமை" யை ஆவிக்குரிய வல்லமையைவிட சரீரப்பிரகாரமானதாக நினைத்துவிடக் கூடாது. பவுலின் புறம்பான மனுஷனானது, அவருடைய சரீரமானது, பெலவீனமுள்ளதாயிருந்தது, ஆகிலும் அவருடைய உள்ளான பெலமோ நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு வந்தது (2 கொரிந்தியர் 4:16).

## பயன்பாடு

**விருப்பமுள்ள ஊழியர்கள்**

பவுல் கிறிஸ்துவுக்கு மிகப்பெரிய ஊழியக்காரனாக தன்னை உருவாக்கியது தன்னுடைய ஒப்புக் கொடுத்தலே என்று காண்பித்தார், அதன் மூலம் நமக்கு ஒரு நல்ல முன் மாதிரியை காண்பித்தார். அவர் தான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல (1 கொரிந்தியர் 11:1), அவரை நாம் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும் என்று எழுதினார் (1 கொரிந்தியர் 4:16; பிலிப்பியர் 3:17). அவர் பிலிப்பியர்களுக்கு புத்திசொல்லி, "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்," என்று எழுதினார் (பிலிப்பியர் 4:9). நாம் விருப்பமுள்ள ஊழியக்காரர்களாக சபைக்கு ஊழியம் செய்து ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக நிறுத்தும்படி கிரியை செய்யக்கூடும்.

நாம் கிறிஸ்துவினிமித்தம் கஷ்டங்களை சகிக்க மன விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசு அனனியாவுக்கு தரிசனமான போது, அவர் அவனிடத்தில் பவுல் எவ்வளவாய் தமது நாமத்தினிமித்தம் பாடுபட வேண்டும் என்று அவனுக்கு காண்பிக்கப் போவதாக சொன்னார் (நடபடிகள் 9:16). தனது ஊழியத்தின் துவக்கத்திலிருந்தே, பவுல் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக தாம் எப்படிப்பட்ட பாடுகளைச் சந்திக்க வேண்டுமென்பதை அறிந்திருந்தார். இதற்கு பதில் கிரியையாக, அவர் இயேசுவுக்கு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட பின் தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்தார் (நடபடிகள் 26:19; கலாத்தியர் 1:1).

பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினால் தான் சந்திக்க கஷ்டங்களை சுட்டிக் காட்டினார் (2 கொரிந்தியர் 6:4-10; 11:23-28). இப்படிப்பட்ட உபத்திரவ நேரங்களில், அவருக்கு உள்ளான போராட்டங்கள் அநேகமாயிருந்தன, அவை பெருத்த மனக்கவலைகளும், வருத்தங்களும், மற்ற எல்லா (உள்ளூர்) சபைகளையும் குறித்த கவலைகளும் தான். அவர் கொரிந்துவிலே இருந்த போது தனக்கிருந்த மனக்கவலைகளை அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதின போது வெளிப்படுத்தியதாவது, "அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்" என்றார் (1 கொரிந்தியர் 2:3). பவுல் கொரிந்துவில் இருந்தபோது, அவருடைய கவலைகளை உணர்ந்தவராக, கிறிஸ்து அவருக்குத் தரிசனமாகிப் பயப்பட வேண்டாம் என ஊக்கப்படுத்தினார் (நடபடிகள் 18:9, 10). அவர் இரவும் பகலுமாய் பிரயாசப்பட்டு (1 தெசலோனிக்கேயர் 2:9) கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் ஒருவருக்கும் பாரமாயிராதபடிக்கும் பார்த்துக்

கொண்டார். நாம் பவுலைப் பின்பற்றுகிறவர்களாயிருப்போமாகில், நாம், "உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயிருப்போம்" (1 கொரிந்தியர் 15:58).

கிறிஸ்துவின் அன்பும் பலியும் பவுல் அவருக்கென வாழச் செய்தது (கலாத்தியர் 2:20). தனது சுய செயல்திறமையால், சுவிசேஷத்தை யாவருக்கும் பிரசங்கிக்க கடமைப்பட்டவர் என்பதையும், தன்னால் இயன்ற வரைக்கும் எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கக் கடமைப் பட்டவர் என்பதையும் உணர்ந்தார். அவர், "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன், ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்" என்று எழுதினார் (ரோமர் 1:14, 15).

கிறிஸ்தவர்களுக்கு கடமைப்பட்டிருத்தல் மற்றும் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருத்தல் ஆகியன நேர் எதிர் வார்த்தைகள் அல்ல. இயேசு தேவனுடைய சித்தத்தை செய்யக் கடமைப்பட்டிருந்தார், ஏனெனில் அவர் தமது சுயசித்தத்தைச் செய்பவராயிராமல், பிதாவின் சித்தத்தை செய்ய வந்தார் (யோவான் 4:34; 5:30; 6:38). பவுல் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய கடமைப் பட்டிருப்பதாக விசுவாசித்தார் (ரோமர் 1:14; 1 கொரிந்தியர் 9:16). இயேசு ஒரு வேலைக்காரனைப் பற்றிக் குறிப்பிட்டு நாள் முழுவதும் வயலிலே வேலை செய்துவிட்டு மாலையில் வீடுதிரும்பின பின்பும் தன் எஜமானன் இடும் கட்டளைக்காக காத்திருந்த கதையைச் சொன்னார். இந்த உவமையிலிருந்து முடிவுரையாக பின் வருமாறு சொன்னார்: "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்" (லூக்கா 17:10; NKJV "எங்கள் கடமைகளை மாத்திரமே செய்தோம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). நாம் நம்முடைய கிறிஸ்தவ சேவையை வினயமாகவும் நாம் செய்ய வேண்டும் என்று இயேசு சித்தங்கொண்டிருக்கிற காரியங்களை பொறுப்பேற்றுக் கொள்ளவும் வேண்டும்.

*சபையின் சேவைக்காக நம்மையே நாம் அர்ப்பணிக்க வேண்டும்.* கிறிஸ்தவ ஜீவியத்தின் முக்கியமான பகுதி ஒருவருக்கொருவர் பணிவிடை செய்வது தான் (கலாத்தியர் 5:13; 1 பேதுரு 4:10). பவுல் சந்தோஷம் நிறைந்தவராய் மனவிருப்பத்துடன் தனது சகக் கிறிஸ்தவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்தார். "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின் மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து உங்களனைவரோடுங் கூடச் சந்தோஷப்படுவேன்" (பிலிப்பியர் 2:17). இந்தப் பிரகாரமாக அவர் இந்தப் பாடுகளை இயேசுவினிமித்தம் சபைக்காக நிறைவுசெய்ய முயற்சித்தார் (வசனம் 24).

பின்வரும் காரியங்களைச் செய்ய நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது:

- கனம் பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் பட்சமாயிருங்கள் (ரோமர் 12:10).
- ஒருவருக்கொருவர் கவலைப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:25).
- ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் (கொலோசெயர் 3:16).

- ஒருவரையொருவர் ஆறுதல்படுத்துங்கள் (1 தெசலோனிக்கேயர் 4:18).
- ஒருவருக்கொருவர் எடுத்துக்கட்டுங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:11).
- ஒருவருக்கொருவர் சமாதானமாயிருங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:13).
- ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துங்கள் (எபிரெயர் 3:13).
- அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவப்படும்படி செய்யுங்கள் (எபிரெயர் 10:24).
- ஒருவருக்கொருவர் ஜெபியுங்கள் (யாக்கோபு 5:16).
- நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனையும் கொடுக்க கடனாளியாயிருங்கள் (1 யோவான் 3:16).
- ஒருவரில் ஒருவர் அன்புகூருங்கள் (1 யோவான் 4:7).

கிறிஸ்தவர்களுக்கு பிற கிறிஸ்தவர்களுடனான கடமையுள்ளது. கேள்வியெல்லாம் "சபை எனக்கு என்ன செய்ய முடியும்?" என்பதல்ல. அநேகக் கிறிஸ்தவர்களுக்கு இந்த எண்ணம் இருக்கிறது. கேட்க வேண்டிய கேள்வி "மற்றவர்களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?" இதுவே இயேசுவின் எண்ணமாக இருந்தது. "நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்தி விருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்" (ரோமர் 15:2, 3).

மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்கிறவர்களே பெரியவர்களா யிருக்கிறார்களென்று இயேசு போதித்தார் (மத்தேயு 20:26; 23:11). அனைத்துக் கிறிஸ்தவர்களும் தங்களைத் தாழ்ந்த வேண்டும், இது இயேசு செய்ததைப் போல செய்யும் பொழுது, மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்ய ஏதுவாக்கும் (பிலிப்பியர் 2:6-8). இயேசுவின் மார்க்கம் ஊழியஞ் செய்கிற ஒன்று.

<u>நாம் அறிந்த அனைவரையும் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக நிறுத்துவது தான் நமது பிரயாசம்.</u> நம்மில் எல்லாருக்குமே நல்ல பண்புகள் உண்டு, ஆகிலும் நம்மிடத்தில் பெலவீனங்களும் உண்டு. தகுதியான இலக்கு இயேசுவுக்காக நன்கு சூழப்பட்ட முன்னேற்றம் தான்.

கிறிஸ்தவர்களாகிய நாம், ... நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிற "பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1). நாம் வளர்ச்சியற்ற குழந்தைகளாகவே இருந்து விடக்கூடாது, மாறாக மூல உபதேசங்களைக் கடந்து கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாகும்படி தேட வேண்டும் (எபிரெயர் 5:12-6:1).

கொலோசெயர் 1:28ல் சொல்லப்படுகிற "தேறினவர்கள்" எனும் வார்த்தை *teleios,* இது எபேசியர் 4:11ல் "நிறைவான வளர்ச்சி" என்று அதே வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதே வார்த்தை "பரிபூரணம்" என்றும் (KJV; NKJV). மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் எல்லாரும் தேறினவர்களாக வேண்டும் என்று விரும்பினார், இதன் பொருள் அவர்கள் இயேசு வைப்போல பூரணமான வளர்ச்சியடையத் தக்கதாக

*தங்களை விருத்தி செய்து கொள்ள வேண்டும் (எபேசியர் 4:13). நாம் அனைத்து கிறிஸ்தவனுக்குரிய ஒழுக்கங்களையும் நமது வாழ்வில் சேர்க்க வேண்டும் அத்துடன் இயேசுவைச் சுழ்ந்த சிறப்பான வளர்ச்சியடைய மற்றவர்களுக்கும் உதவ வேண்டும் (கலாத்தியர் 5:22, 23; 2 பேதுரு 1:5-7). இப்படியாக நாம் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாவோம்.*

*நாம் ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தி இன்னும் அதிகமாக கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தலையும் நமது வாழ்க்கையில் கிறிஸ்துவின் தகுதியாம்சங்களை பெருக்கிக் கொள்ளவும் செய்யவேண்டும். இது மற்றவரை கடிந்து கொண்டு அதே வேளையில் ஒருவருக்கொருவர் இயேசுவுக்கென்று சிறப்பான ஊழியத்தைக் கொடுக்க உற்சாகமளிக்க வேண்டும்.*

***பாடுகள் இருப்பினும் ஊழியம் செய்தல் (1:24-26)***

*இயேசுவும் அவருடைய சபையும் பவுலின் மனதில் முதலிடத்தைப் பெற்றிருந்தன, ஆக இந்த இரண்டிற்கும் தன்னையே முற்றிலுமாக கொடுக்க மன விருப்பமுள்ளவராயிருந்தார். இயேசுவுக்கு ஊழியஞ்செய்ய அவர் விரும்பினார், இதற்கு அவர் தன்னை பலியாக ஒப்புக்கொடுக்கவும் தயாரானார். பவுல் கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக வாழ்ந்தவர் (1 கொரிந்தியர் 11:1). அவருடைய ஜீவியத்திலிருந்து நாம் எவைகளைக் கற்றுக் கொள்ளக் கூடும்?*

*பவுல் கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்காளியாக இருந்தார் (வசனம் 24). இயேசு கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவமற்ற விடுதலையை வாக்களிக்க வில்லை. அதற்கு மாறாக, அவருக்காக வாழுகிறவர்களுக்கு உபத்திரவமே வாக்களிக்கப்பட்டது (2 தீமோத்தேயு 3:12). இந்தக் காரணத்தினால், நமக்கு எதிராக எதிர்ப்புக்களையே எதிர்பார்க்கக்கூடும் (1 பேதுரு 4:12). இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமேயொழிய சபிக்கக் கூடாது, நமக்கு தீங்கு செய்ய விரும்புவோருக்காக ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 5:44; ரோமர் 12:14). இயேசுவே பொறுமையோடு துன்பத்தை சகிப்பதற்கு ஒரு முன்னுதாரணம் (1 பேதுரு 2:21).*

*கிறிஸ்துவைப் போல, பவுலும் மனமுவந்து சரீரமாகிய, சபைக்காக பாடுபட்டார் (வசனம் 24). கிறிஸ்தவர்களாகிய நாம், நமது மனதை சபைக்கு மிக உச்சக்கட்ட முக்கியத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் ஜெபங்களும் போதிக்கிற பிரயாசங்களும், பணத்தை முறையாகப் பயன்படுத்துதலும், வாழ்க்கைப் பண்புகளும் உள்ளானவை. சபைக்கு தலைக் குனிவை ஏற்படுத்துகிற செயலில் ஒருபோதும் கிறிஸ்தவன் ஈடுபட்டு விடக்கூடாது. சபைக்காக நம்மையே நாம் அர்ப்பணிக்க வேண்டும், கிறிஸ்துவும் சபைக்காகத் தம்மையே கொடுத்து போல நம்மைக் கொடுக்க வேண்டும் (எபேசியர் 5:25; 1 யோவான் 3:16).*

*பவுல் தனது பாடுகளை ஒரு உக்கிராணத்துவம் உள்ளவனாக ஏற்றுக் கொள்ளப்பார்த்தார் (வசனம் 25). அவர் தான் இயேசுவுக்காக ஊழியம் செய்வதை உணர்ந்திருந்தார். அவர் தனது நேரம், உடமைகள் மற்றும், தாலந்துகள் அனைத்துக்கும் உக்கிராணத்துவம் உள்ளவராயிருந்தார். கிறிஸ்தவர்கள் இப்படியாக சிந்திக்கக் கற்றுக் கொள்ளலாம். நமது வீடுகளும்,*

வங்கிக் கணக்குகளும், உடமைகள் அனைத்தும் இயேசுவுக்கே சொந்தம். முழுமையாக நாமும் நம்முடையவைகள் யாவும் அவருடையவை. நம்முடைய சிறப்பான திராணிக்கு ஏற்ப, நம்முடைய ஆசீர்வாதங்களை இயேசுவுக்காக பயன்படுத்த வேண்டும்.

சில கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் காணிக்கை எடுத்து வரும்போது தங்களுடைய காணிக்கையை செலுத்தியபின், மீதி தங்களிடமுள்ள பணமனைத்தும் தங்கள் பிரியத்திற்கேற்ப செலவிட்டுக் கொள்ளலாம் என்று நினைப்பது போல் தெரிகிறது. தேவன் காணிக்கையை மட்டும் பார்ப்பதில்லை, ஆனால் ஒரு நபர் தன்னிடம் வைத்துள்ள பணமனைத்தையும் எப்படி செலவிடுகிறார் என்பதையும் கணக்கில் வைக்கிறார்.

### மற்றவர்களை இரட்சிப்பிற்குள் நடத்துவது (1:26-28)

பவுல் ஒரு இரகசியத்தை வெளிப்படுத்த பிரயாசப்பட்டார் (வசனங்கள் 26, 27). பழைய ஏற்பாட்டின் கீழ், இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டம் அறியப்படாதிருந்தது. புதிய ஏற்பாடு வெளிப்படுத்தப்படும் வரை அது தொடர்ந்து இரகசியமாகவே இருந்தது (எபேசியர் 3:3-5). தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்து கொள்ளவும் மனித வர்க்கத்தை அதிலே ஒற்றுமைப்படுத்தவும் உதவுவதே பவுலின் ஊழியமாக இருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது ஒரு இலக்காக இருக்கிறது. இன்றைக்கும், இரட்சிப்பின் தேவைகளை புரிந்து கொள்ளாதவர்களுக்கு திருமறை ஒரு இரசியமாகத் தான் உள்ளது. கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லுவோர் மற்றவர்களும் இரட்சிக்கப்பட தேவன் கொண்டுள்ள கோரிக்கைகளை அறிந்து கொள்வதில் உதவிசெய்ய முயற்சிக்க வேண்டும்.

கூடுதலாக, பவுலின் இலக்கும் மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாகச் செய்வதாக இருந்தது (வசனம் 28). பவுலின் நோக்கம் ஜனங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை துவங்கும்படி செய்வது மட்டுமல்லாமல், அவர்களைத் தேறின கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகிற குணாதிசயமுள்ளவர்களாய் பெருகப்பண்ணுவதுமாயிருந்தது. கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை மற்றவர்களை இயேசுவைப் போல் மாறும்படி வளர்ச்சியடைய ஊக்குவிக்க வேண்டும். இது விசேஷமாக கர்த்தருடைய சபையிலிருக்கிற முன்னோடி தலைவர்களின் கடமையாகும், அவர்களுக்கு பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்தி தேறினவர்களாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது (எபேசியர் 4:11-13). கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக மாற அவரைப் போன்ற தகுதியாம்ஸங்களைப் பெற்று கொள்ளச் செய்வதே தக்க வழி.

### மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல் (1:29)

கிறிஸ்துவுக்கு செய்கிற ஊழியம் மற்றவர்களையும் உட்படுத்தியது, இதுபோல் இயேசுவும் பவுலும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்தனர். கடைசி பந்திக்குப்பிறகு, அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் யார் பெரியவன் என்று வாதாடிக் கொண்டிருந்தனர் (லூக்கா 22:24-27). இயேசு அவர்களுக்குப் போதிக்கும்படி ஒரு உதாரணத்தைக் கொடுத்தார். ஊழியம் செய்கிறவன்

எவனும் பெரியவன் என்றார் (யோவான் 13:1-15). ஒரு அடிமையைப் போல, பணிசெய்யும் கடமையுணர்வைத் தமக்குள் கொண்டு தம்மைத் தாழ்த்தி, அவர் அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவினார். ஒரே மனமுடையவராய் அவருக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்கிறவர்களே இயேசுவின் பெரிய சீஷர்களாயிருக்கிறார்கள்.

பவுல் தன்னுடைய சுய பிரயாசத்தை விவரித்தார் (வசனம் 29). அவர் மற்றெல்லாரையுங்காட்டிலும் அதிகமாய் பிரயாசப்பட்டு அதிகமாய் உபத்திரவங்களைச் சகித்தவர் (1 கொரிந்தியர் 15:10; 2 கொரிந்தியர் 11:23-28). எதிர் நோக்கும் நியாயத்தீர்ப்பு, கர்த்தருக்குப் பயப்படும் பயன், கிறிஸ்துவிடத்தில் கொண்டுள்ள அன்பு, அவருக்காக இயேசு மரித்தார் என்ற உண்மை ஆகியவற்றினிமித்தம் அவர் கிறிஸ்துவைப் பிரியப்படுத்த உந்தப்பட்டார் (2 கொரிந்தியர் 5:14, 15; கலாத்தியர் 2:20). பவுலின் ஒப்புக் கொடுக்கப்பட்ட ஊழியத்தின் காரணத்தை அறிந்து, ஒவ்வொரு கிறிஸ்தவனும், தன் விசேஷ ஊழியத்தை நிறைவு செய்ய ஊக்கப்படுத்தப்பட முடியும் (ரோமர் 12:6-8).

**தேவனுடைய வல்லமையின் மூலம் ஊழியம் செய்தல் (1:29)**

தேவன் பவுல் மூலம் கிரியை செய்துகொண்டிருந்தார் (வசனம் 29). தேவனே அனைத்துக்கிரியைகளையும் செய்திருந்தால், மனித பிரதிநிதித்துவம் தேவையற்றது, எப்படியிருப்பினும், தேவன், கிறிஸ்தவர்களுடைய கரங்களிலே மகிமையுள்ள சுவிசேஷத்தைக் கொடுத்துள்ளார் (2 கொரிந்தியர் 4:7). அவர் ஊழியம் செய்யவும் அவருடைய வசனத்தை மற்றவர்களுக்குப் பரப்பவும் நாமே கருவிகளாக இருக்கிறோம் (1 கொரிந்தியர் 3:5-9). இயேசு இராணுவப்படைக்கு இடும் கட்டளையைப் போல, அவர் தமது செய்தியை எடுத்துக் கொண்டு உலகமெங்கும் போகும்படிச் சொன்னார் (மத்தேயு 28:19; மாற்கு 16:15, 16). மனப்பூர்வமாய் அவர்களுக்குக் கீழ்ப்படிபவர்களை அவர் பெலப்படுத்துகிறார் (பிலிப்பியர் 4:13). கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வினையமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் தாம் துவக்கின இப்பிரதானமான ஊழியத்தை அவரைப் பின்பற்றிச் செல்வோர் நிறைவு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார். அந்த ஊழியம் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் செய்கிற ஊழியம்.

---

குறிப்புகள்

[1]William Hendriksen, *Exposition of Colossians and Philemon,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 86. [2]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 90. [3]Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commentary,* trans. Andrew Chester (Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982), 105–6. [4]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon,* rev. (London: Macmillan & Co., 1916), 166. [5]காண்க ரோமர் 11:25; 16:25; 1 கொரிந்தியர் 2:7; 4:1; எபேசியர் 1:9; 3:3-11; கொலோசெயர் 1:27; 4:3. [6]காண்க ஆதியாகமம் 22:18;

*26:4; 28:14; 49:10; சங்கீதம் 72:8; ஏசாயா 2:2, 3; 54:2, 3; 60:1-3; மீகா 4:1, 2; மல்கியா 1:11.* [7]*காண்க ரோமர் 1:1; 1 கொரிந்தியர் 1:1; கலாத்தியர் 1:1; கொலோசெயர் 1:1; 1 தீமோத்தேயு 1:1; 2 தீமோத்தேயு 1:1.* [8]*காண்க நடபடிகள் 13:46; 14:25; 15:35, 36; 16:32; 17:13; 18:5, 11; 1 கொரிந்தியர் 15:2; பிலிப்பியர் 1:14; 1 தெசலோனிக்கேயர் 2:13.* [9]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 230. [10]*1 கொரிந்தியர் 2:6ல் வார்த்தை* ("mature") *"தேறினவர்" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் 1 கொரிந்தியர் 14:20; எபேசியர் 4:13; எபிரேயர் 5:14; அதுவே மத்தேயு 5:48; ரோமர் 12:2; 1 கொரிந்தியர் 13:10; பிலிப்பியர் 3:15; கொலோசெயர் 4:12; எபிரெயர் 9:11; யாக்கோபு 1:4; 17, 25; 3:2; 1 யோவான் 4:18ல்* "perfect" *என்றுள்ளது.*